**<u>கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.</u>**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M.,**
நீதித்துறை நடுவர்.
2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் –32ம் நாள்

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை

<u>C.C. No. 324/2024</u>

<u>CNR No.TNTH02-007-283-2024</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு பட்டிகை வழக்கு எண் | : | 324/2024 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண் | : | TNTH02-007-283-2024 |
| 3. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>வீரபாண்டி காவல்நிலையம்,<br>தேனி. |
| 4. | குற்ற எண் மற்றும் இதச பிரிவுகள் | : | Cr.No.104/2024; U/s. 294(b), 323, 324, 506 (2) of IPC and 4 of TNPHW Act . |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர், வயது, தந்தைப்பெயர் மற்றும் முகவரி. | : | 1. ரஞ்சித், (36/24),<br>த.பெ.ஈஸ்வரன்,<br>No.92, செல்லாண்டியம்மன் கோவில் தெரு, தாடிச்சேரி, தேனி மாவட்டம்.<br><br>2. ஈஸ்வரன், (55/24).<br>த.பெ.பழனி,<br>செல்லாண்டியம்மன் கோவில் தெரு, தாடிச்சேரி, தேனி மாவட்டம். |
| 6. | சம்பவ தேதி | : | 29.03.2024 |
| 7. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 30.03.2024 |
| 8. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 30.03.2024 |
| 9. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 05.04.2024 |
| 10. | எதிரிகள் மீது சுமத்தப்பட்ட | : | எதிரிகள் மீது U/s. 294(b), 323, 324, 506 (2), |

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:20:30 +0530

| | | | |
|---|---|---|---|
| | குற்றச்சாட்டு | | of IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 11. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது U/s. 294(b), 323, 324, 506 (2), of IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| 12. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 13. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 26.11.2024 |
| 14. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 10.07.2026 |
| 15. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 16.07.2026 |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரிகள் மீது U/s. 294(b), 323, 324, 506 (2), of IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருகிறது. |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவில், எதிரிகள் மீதான இதச U/s. 294(b), 323, 324, 506 (2), of IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

இவ்வழக்கானது 13.08.2024–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும்,

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:20:36 +0530

சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**தீர்ப்புரை**

1) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

இவ்வழக்கின் வாதி வைரவன் தாடிச்சேரி செல்லாண்டியம்மன் கோவில் தெருவில் தனது குடும்பத்துடன் வசித்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறார் என்றும், வாதிக்கும் 1வது எதிரி ரஞ்சித்துக்கும் பணப்பிரச்சனை சம்பந்தமாக ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்துள்ளது என்றும், 29.03.2024ம் தேதி இரவு 8.45 மணிக்கு வாதி தாடிச்சேரி செல்லாண்டியம்மன் கோவில் அருகில் நின்று கொண்டிருந்த போது 1வது எதிரியும் உடன் வந்த 2வது எதிரி ஈஸ்வரனும் TN60AL9023 என்ற APE ஆட்டோவை வாதி மேல் ஏற்றுவது போல் முறுக்கிக்கொண்டு வந்து வாதியைப் பார்த்து ஏண்ட தேவுடியா மகனே, அவுசாரி மகனே நீயெல்லாம் பெரிய ஆளாடா பைக் விற்ற பணம் கேக்குற என்று அசிங்கமாக பேசிக்கொண்டே இருவரும் கைகளால் மாறி மாறி முதுகில் அடித்து கீழே தள்ளிவிட்டு அப்போது ரஞ்சித் ஆட்டோவில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து குத்த வந்த போது வாதி தடுத்ததில் வாதிக்கு இடது முழங்கையில் இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும் 2வது எதிரி அருகில் கிடந்த கல்லை எடுத்து வாதி முதுகில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தி உள்ளார். அப்போது அங்கு வந்த வாதியின் அம்மா சென்னம்மாளைப்பார்த்து தேவுடியா கண்டாரோலி மகளே உன் மகனுக்கு நீ என்னடி சப்போட்டா வர்றது என்று சொல்லி வாதியின் அம்மாவை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து எதிரிகள் இருவரும் கைகளால் மாறி மாறி முதுகில் அடித்து கீழே தள்ளி விட்டு அவருக்கு வீக்க காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அப்போது அருகில் இருந்தவர்கள் விலக்கி விடவும் எதிரிகள் இருவரும் ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து கொண்டு இனிமேல் எங்களிடம் பைக் விற்ற பணத்தை கேட்டால் உங்களை இந்த ஆட்டோவை வைத்து ஏற்றி கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்து வாதிக்கு அவரது அம்மாவிற்கும் உயிர்பயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் மீது சட்டப்பிரிவு U/s. 294(b), 323, 324, 506 (2), of IPC and 4

of TNPHW Act பிரிவுகளின் கீழ் வீரபாண்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **அழைப்பாணை சார்வு செய்தல், நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு பற்றி வினவுதல்:**

குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரிகள் மீதான இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்ட பின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரிகள் குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தோன்றியதால் எதிரிகள் மீது சட்டப்பிரிவு U/s. 294(b), 323, 324, 506 (2), of IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினர்.

3) எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பு சான்று பொருள் ஆவணமாக சாபொ 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) **அரசுத் தரப்பின் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

(4–1) புகார்தாரரும் / அ.சா.1–மான வைரமணி தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றும், கடந்த 2024ம் வருடம் ஒருநாள் எதிரிகளுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், எனவே காவல் நிலையம் சென்று விசாரிக்க சொன்னேன் என்றும், போலிசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பமும் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அந்தப் கையெழுத்து அ.சா.ஆ.1 என்றும், அதன்பின்னர் போலீசார் எதிரி மீது வழக்கு பதிவு செய்திருப்பதை

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:20:47 +0530

தெரிந்துகொண்டதாகவும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4–2) அ.சா.2 சென்னம்மாள், தனது சாட்சியத்தில், அ.சா. 1எனது மகன் என்றும், ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றும், கடந்த 2024ம் வருடம் ஒருநாள் எதிரிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் எனவே காவல் நிலையம் சென்று விசாரிக்க சொன்னேன் என்றும், அதன் பிறகு போலிசார் எதிரி மீது வழக்கு பதிவு செய்திருப்பதை தெரிந்துகொண்டதாகவும் மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து போது சமாதானம் ஆகிவிட்டோம் என்றும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4–3) அ.சா.3 முத்துக்கருப்பையா சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் வீரபாண்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மற்றும் புலன் விசாரணை அதிகாரியாக இருந்த சார்பு ஆய்வாளர் கோகுலகண்ணன் என்பவர் பணி ஓய்வில் சென்றுவிட்ட காரணத்தினால், ஆவணங்களின் அடிப்படையிலும் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.03.2024 அன்று 08.00 மணிக்கு நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளர் இருந்தபோது, தேனி க. விலக்கு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்து அ.சா.1–டம் புகார் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் . 104/2024 ஆக இதச பிரிவுகள் 294(b), 323, 324. 506(ii), மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு4–ன் படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ( அந்த புகார் வாக்குமூலம் அ.சாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:20:51 +0530

(4.–4) புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். மற்ற நகல்களை உயர்அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தார். அன்றைய தினமே இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் 09.00 மணிக்கு சென்று சாட்சிகள் பரமசிவம் மற்றும் பால்ராஜ் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (அந்த பார்வை மகஜர். அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது மாதிரி வரைபடம் அ.சாஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது) . சாட்சிகள் வைரவன், சென்னம்மாள், சின்னகருப்பையா ஆகியோரையும், மகஜர் சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிந்து எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு தாடிச்சேரி பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரிஷிக்குமார் விசாரித்து காயச்சான்று கிடைக்கப்பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். (அந்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.6 மற்றும் அதன் பின்புறம் உள்ள சான்று அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது*).* படிவம் *91* மூலம் எதிரி பயன்படுத்திய கத்தியை அத்தாட்சியில் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்பித்து *RPR No.7/2024* எண் பெற்றேன்*.* படிவம் *91* அ.சா.ஆ*.8* ஆக குறியீடு செய்யப்படுகிறது*.* அத்தாட்சி அ.சா.ஆ*.9*ஆக குறியீடு செய்யப்படுகிறது*).* மேற்படி கத்தி சாபொ*1* ஆக குறியீடு செய்யப்படுகிறது*.* அன்றைய தினமே தனது விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

5) இவ்வழக்கின் அ.சா.3–ன் சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை பிரிவு 351(1)(b) BNSS–ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சியம் எனவும், தங்கள் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறியதன் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:20:55 +0530

6) இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

7) <u>தீர்வு மற்றும் தீர்வுக்குரிய காரணங்கள்:</u>

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(7–1) புகார்தாரரும் / அ.சா.1–மான வைரமணி தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றும், கடந்த 2024ம் வருடம் ஒருநாள் எதிரிகளுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், எனவே காவல் நிலையம் சென்று விசாரிக்க சொன்னேன் என்றும், போலிசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பமும் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அந்தப் கையெழுத்து அ.சா.ஆ.1 என்றும், அதன்பின்னர் போலீசார் எதிரி மீது வழக்கு பதிவு செய்திருப்பதை தெரிந்துகொண்டதாகவும், வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1–ன் மேற்படி சாட்சியத்தின் காரணமாக எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து ஐயப்பாடு எழுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(7.2) அ.சா.2 சென்னம்மாள், தனது சாட்சியத்தில், அ.சா. 1எனது மகன் என்றும், ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றும், கடந்த 2024ம் வருடம் ஒருநாள் எதிரிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும் எனவே காவல் நிலையம் சென்று விசாரிக்க சொன்னேன் என்றும், அதன் பிறகு போலிசார் எதிரி மீது வழக்கு பதிவு செய்திருப்பதை தெரிந்துகொண்டதாகவும் மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து போது சமாதானம் ஆகிவிட்டோம் என்றும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**8)** இங்கு அ.சா.1 தனது நீதிமன்ற முதல்விசாரணையில் நிலுவையில் இருந்தபோது எதிரிகளுடன் சமாதானம் ஆகி விட்டோம் என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையில், அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாக கூறும் முதல் தகவல் அறிக்கை பற்றியும், அதில் உள்ள சங்கதிகள் பற்றியும் சந்தேகம் எழுகிறது. மேலும் பிறழ் சாட்சிகளான அசா1 மற்றும் அசா2 சாட்சிகளை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியம் செய்தும் எந்தவிதமான முரண்பாட்டையும் அரசுத்தரப்பில் வெளிக்கொனர இயலவில்லை.

**9)** இவ்வழக்கில் அ.சா.1 நீதின்ற சாட்சியத்தில் தற்போது தாங்களும், எதிரிகளும் சமாதானமாகிவிட்டதாக முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ள நிலையில், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10)** மேற்கண்டவாறு அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரர் / அ.சா.1–ம் எதிரிகளும் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359 BNSSன் கீழ் மனுதாக்கல் செய்து அம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்டுள்ள அ.சா.1 தனது முதல் விசாரணையிலேயே அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், நீதிமன்ற கேள்வியின் போதும் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டோம் என்று முரண்பட்டும் சாட்சியமளித்துள்ள நிலையிலும், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** இறுதியாக, எதிரிகள் மீதான U/s. 294(b), 323, 324, 506 (2), of IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:21:04 +0530

12) இந்த வழக்கு விசாரணையின் போது எதிரிகள் காவல் நிலைய பிணையில் இருந்து ஆஜராகியுள்ளனர். எனவே, பிணை பத்திரம் பற்றிய உத்தரவில்லை.

13) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு சொத்து பற்றிய தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 16-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:21:09 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் | பெயர் | விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | வைரமணி | புகார்தாரர் |
| அ.சா.2 | சென்னம்மாள் | |
| அ.சா.3 | முத்துக்கருப்பையா | புலன் விசாரணை அதிகாரி |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| அரசு தரப்பு சான்றாவணங்கள் | சான்றாவணங்கள் விபரம் | சான்றாவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள கையெழுத்து | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேட்டு நகல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | காயச்சான்று | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | படிவம் 91 | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | அத்தாட்சி | அ.சா.3 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்:**

| அரசு தரப்பு சான்று பொருள் | சான்றாவணங்கள் விபரம் | சான்றாவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| சாபொ1 | கத்தி | அ.சா.3 |

**எதிரிகள் தரப்பு சாட்சி:** **இல்லை.**

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்:** **இல்லை.**

JAYABHARATHI DURAI
Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.16 20:21:15 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**குறிப்பு :**

வழக்கின் முடிவு காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.

எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

வழக்கு விசாரணையின்போது எதிரிகள் காவல் நிலைய பிணையிலிருந்தனர்.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.